1979 பிப்ரவரி 13]

ஆனால் மாயூரத்திலே அத்தகைய கருவகள் இல்லை என்ற பிரச்சினையை இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி எந்தவித அறிவிப்பும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. முறையாக அதுபற்றித் தெரிவித்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே அமைச்சர் அவர்கள் அறிவிக்கும்பொழுது 66 வட்டங்களிலே ஆரம்பித்திருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் ஆரம்பிக்கப் படாமல் பல இடங்கள் இருக்கின்றன. அவைகளில் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

கால்நடைத் தீவனங்களில் கலப்படத் தடுப்பு.

*வினா எண். 37— திரு. ரெ. வி. சவுந்திரராசன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களில் கலப்படம் செய்யப்படு வதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

(ஆ) இது குறித்து கடந்த ஆண்டில் நடவடிக்கைகளுக்கு உள்ளானவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) கால்நடைத் தீவனம் மற்றும் கோழித் தீவனங்களில் கலப்படம் செய்யப்படு வதைத் தடுக்க சட்டம் ஒன்று இயற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன : தலைவர் அவர்களே, மனிதர்கள் சாப்பிடும் உணவிலே கலப்படம் செய்தால் அவை களைக் கண்டு பிடிப்பதற்கு அடல்ட்ரேஷன் அனலிடிகல் சென்டர்கள் இருக்கின்றன. இந்த கால்நடைகளுக்கான உணவிலும், பிண்ணாக்கிலும் கலப்படம் நடக்கிறது, எப்படி எப்படி தீவனங்களில் கலப்படம் செய்கிறார்கள் என்பது கால்நடைகளை வளர்ப்பவர்களுக்குத்தான் தெரியும். ஆகவே, தீவனங்களிலே கலப்படம் செய்வதைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே மாவட்டத்திற்கு ஒரு பரிசோதனை சென்டர் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் அதைத் தான் குறிப்பிட்டேன். அதற்காக சட்டம் இயற்றுகின்ற செயற்குறிப்பு தான் இருக்கிறது, கால்நடை இலாகாவிலே அது குறித்து எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு, கடன் வசதிகள்.

*வினா எண். 38— திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாயகம் திரும்பிய அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் இடத்தில் வேலை வாய்ப்பு, கடன் வசதி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்கட்கு, அவர்களது குடும்ப அட்டையில், கண்டி உதவி உயர்மட்ட ஆணையாளரால் எந்த உதவிக்கு, குறிப்பிட்டு அனுப்பப்படுகிறார்களோ அந்த உதவி, தாயகம் திரும்பி வந்தவுடன் அளிக்கப்படுகிறது. இதேபோலத்தான் பர்மாவிலிருந்தும், வியட்நாமிலிருந்தும் தாயகம் திரும்பி வருபவர்கட்கும் அவரவர்கள் விருப்பப்படி குறிப்பிட்ட உதவி வழங்கப்படுகிறது. தாயகம் திரும்பி வந்தபின், இவர்கள் மாற்று உதவிக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களது வேண்டுகோளும், பரிசீலனை செய்யப்பட்டு மாற்று உதவிகள் மாநில மறுவாழ்வுத்துறை இயக்குநராலும், சென்னையிலுள்ள மத்திய மறுவாழ்வுத்துறை இயக்குநராலும் வழங்கப்படுகின்றன. ஆகவே, தற்போது தாயகம் திரும்பி வருபவர்கட்கு, மறுவாழ்வு திட்டத்தின்கீழ் கடன் வசதி, வேலை வாய்ப்பு முதலிய உதவிகள் அவரவர்களது விருப்பத்திற்கிணங்கத்தான் வழங்கப்படுகிறது.

திரு. க. அரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கடன் வசதிகளும் செய்து தரப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற தாயகம் திரும்பிய அகதிகள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கிறபோது எல்லாம் அதிகாரிகள் அவர்கள் விருப்பத்திற்கு தக்கபடி—என்ன தான் குடும்பக் கார்டுகளைக் கொடுத்து வேலைவாய்ப்பும் கடனும் கேட்டால்கூட—நடக்காமல் அதிகாரிகள் தங்களுடைய விருப்பப்படி நடக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியும் இதுநாள் வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி அறிவிக்க இயலுமா ?